நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், ழுஹருக்கு முந்திய நான்கு ரக்அத்களையும், ஸுபஹுக்கு முந்திய இரண்டு ரக்அத்களையும் விடவே மாட்டார்கள்

ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகின்றார்கள் : நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், ழுஹருக்கு முந்திய நான்கு ரக்அத்களையும், ஸுபஹுக்கு முந்திய இரண்டு ரக்அத்களையும் விடவே மாட்டார்கள்.
[சரியானது] [இமாம் புஹாரி இதனைப் பதிவு செய்திருக்கிறார்]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், தனது வீட்டில், உபரியான தொழுகைகளான, ழுஹருக்கு முந்திய நான்கு ரக்அத்களையும் இரு ஸலாம்களுடனும், பஜ்ருக்கு முந்திய இரு ரக்அத்களையும் விடாமல் தொழுதுவருவார்கள் என ஆஇஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

http://www.sunnah.global/hadeeth/ta/show/11249